113

அனுப்புநர்
திரு ஞா. நாகராஜன், B.E., AITP., MBA., B.G.L.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
திருநெல்வேலி மண்டலம்,
தெற்கு புறவழிச்சாலை,
திருநெல்வேலி - 5
Web site : www.tn.gov.in/tcp
Email ID : ddtcptnv@gmail.com

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்
குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம்
தூத்துக்குடி மாவட்டம்

ந.க. எண் 3406/2017 திலிம3, நாள் 14.12.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048, கார்த்திகை 28

அய்யா,

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - திருநெல்வேலி மண்டலம் - திருநெல்வேலி மாவட்டம் - சங்கரன்கோவில் வட்டம் - பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவை எண். 155/1 மற்றும் இளையரசனேந்தல் ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவை எண் 303/2பி2 மற்றும் 303/3ஏ-ல் அமையும் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திரு எஸ். காந்திராஜ், கோவில்பட்டி விண்ணப்பம் நாள் 27.10.2017
2. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
3. அரசாணை எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 13.10.2017
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13193/17 எல் ஏ 2, நாள்.30.10.17, 31.10.2017, 03.11.2017 மற்றும் 07.11.2017

-------

பார்வை 1-ல் கண்டுள்ள மனுதாரர் கடிதத்தில் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண். 155/1 மற்றும் இளையரசனேந்தல் ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண் 303/2பி2 மற்றும் 303/3ஏ-ல் அமைந்துள்ள 15505.09 சமீ (3.83 ஏக்கர்) பரப்பளவு கொண்ட அனுமதியற்ற மனைப்பிரிவினை முறைப்படுத்திட விண்ணப்பம் பெறப்பட்டு, பார்வை 2 மற்றும் 3-ல் கண்டுள்ள அரசாணைகளின் படி பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விபரங்களுடன் தயார் செய்யப்பட்ட Layout Frame Work-க்கு **ம.வ (மு)/ம.(திலி) எண்.32/2017**என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்புதலளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | - 15505.09 சமீ |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | - 78 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - 29 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் எண்ணிக்கை | - 47 |

S. [signature]

உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட மனைகள் - 02
விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பு - 7020.48 சமீ

| விற்பனை செய்யப்படாத மனை எண்கள் | **பொது ஒதுக்கீடு (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10% )** |
|---|---|
| 1, 4, 7ஏ, 16, 17, 18, 22, 26 முதல் 30 வரை, 34 முதல் 38 வரை, 40 முதல் 49 வரை, 53 முதல் 59 வரை, 62, 64 முதல் 75 வரை | பூங்கா 1 - 290.22 சமீ (மனை எண் 19, 32) ஏற்கனவே உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.<br>பூங்கா 2 - 278.91 சமீ (மனை எண் 34, 35)<br>பூங்கா 3 - 150.10 சமீ (மனை எண் 45)<br>மொத்த பொது ஒதுக்கீடு பரப்பு - 719.23 சமீ (10.24%) |

**மனைப்பிரிவில் அமையும் தனித்த மனைகளை வரன்முறைபடுத்திட பார்வை 2 மற்றும் 3-இல் கண்டுள்ள அரசாணைகளின் படி, உள்ளாட்சியால் கீழ்கண்டவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.**

1. மனைகளுக்கு கூராய்வு கட்டணம் www.tnlayoutreg.in என்ற இணையதளத்தில் மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் செலுத்தப்பட்ட இரசீதினை பெற்றுக் கொண்டு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.
2. வரன்முறைக்கட்டணமாக அந்தந்த மனைகளுக்கான பரப்பளவில் சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
   **வரன்முறை கட்டணம் செலுத்துவதற்கான - அரசு கணக்கு தலைப்பு**
   0217-Urban Development
   60- Other Urban Development Schemes –
   800 Other Receipts -
   AT Receipt under Regularisation Charges of Unapproved Layout and plots – DTCP
   (D.P. Code : 0217-60-800-AT-0007)
3. வளர்ச்சிக் கட்டணமாக (Development Charges) அந்தந்த மனைகளுக்கான பரப்பளவில் சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் மனுதாரரிடமிருந்து வசூல் செய்து தனிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அரசாணைகளில் தெரிவித்துள்ளவாறு பராமரிக்கப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணைகளின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

S. [signature]

2. இவ்வரன்முறைப்படுத்தப்படும் மனைப்பிரிவிலுள்ள மனைகள் மட்டுமே வரன்முறைபடுத்த இசைவு அளிக்கப்படுகிறது. மனையில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு தனியாக கட்டிட அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட Layout Frame Work வரைபடம் உரிய நடவடிக்கை தொடரும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனைப்பிரிவு வரைபடம் மற்றும் கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு இவ்வலுவலகத்திற்கு ஒப்புகை சான்று அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
திருநெல்வேலி - 5

**இணைப்பு**
மனைப்பிரிவு Frame work வரைபடம் - 2

**நகல்**

1. திரு எஸ். காந்திராஜ், த/பெ, திரு எஸ். ஆர். சுந்தர்ராஜன், 59/எம்13, ராமையா நகர், 3வது தெரு, கோவில்பட்டி (கடிதம் மட்டும்)

2. சார்பதிவாளர், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் (வரைபடம் இணைப்புடன்) (மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதிகளை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.)

3. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை மாவட்ட ஆட்சியர்அலுவலக வளாகம், திருநெல்வேலி (வரைபடம் இணைப்புடன்) (மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதிகளை வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சி பெயரில் உட்பிரிவு செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.)

4. தொழில் நுட்ப வைப்பறை (கடிதம் மற்றும் வரைபடம்)

117

குருவிகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை :திரு.சு.பார்த்தசாரதி

ஆ3/5535/2017

நாள்: .01.2018

பொருள்: மனைவரன்முறை-தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி/கிராமம் சர்வே எண் 155/1 மற்றும் இளையரசனேந்தல் ஊராட்சி/கிராமம் சர்வே எண்303/2பி2 மற்றும் 303/3ஏ -ல் அமைந்துள்ள மனைப்பிரிவில் உள்ள 44 மனைகளை வரன்முறைப்படுத்தி உத்திரவிடல்

பார்வை:
1.அரசானை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(ந.வ.4(3) துறை நாள்:04.05.2017
2.அரசானை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(ந.வ.4(3) துறை நாள்:13.10.2017
3.துணை இயக்குநர்(பொ) நகர் ஊரமைப்புதுறை அவர்களின் கடிதம் ந.க.எண் 3406/2017 திலி ம3 நாள:14.12.2017
4.திரு.எஸ்.காந்திராஜ் கோவில்பட்டிஎன்பவரின் விண்ணப்பம் நாள்: 30.01.2018

***************

**ஆணை,**

பார்வை 3-ல் கண்ட கடிதத்தின் வழி தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி/கிராமம் சர்வே எண் 155/1 மற்றும் இளையரசனேந்தல் ஊராட்சி/கிராமம் சர்வே எண்303/2பி2 மற்றும் 303/3ஏ -ல் அமையும் மனை எண் 1 4 7ஏ 16 17 18 22 26 முதல் 30 வரை 36 முதல் 38 வரை 40 முதல் 44 வரை 46 முதல் 49 வரை 53 முதல் 59 வரை 62 64 முதல் 75 வரையுள்ள 44 மனைகளுக்கு ம.வ.(மு)/ம (திலி) எண் 32/2017-ன் மூலம் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மேற்படி மனைப்பிரிவில் அமையும் 44 மனைகளுக்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1.கூராய்வு கட்டணம் ரூ. 500 வீதம்/ ரூ. 22000/ இணையதளம் வழியாக 25.01.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது.
(Payment Mode Online Transaction Number LDMP 5999803126 நாள்25:01.2018)

2.வளர்ச்சிகட்டணமாக ரூ. 170574/-பிச்சைத்தலைவன்பட்டி மற்றும் இளையரசனேந்தல் ஊராட்சியில் நாள்: 30. 01.2018அன்று செலுத்தப்பட்டுள்ளது.

3.வரன்முறை கட்டணமாக ரூ. 204693/பாரத மாநில வங்கி கோவில்பட்டி கிளையில் உரிய தலைப்பில நாள்:24.01.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது

உரிய கட்டணங்கள் அனைத்தும் செலுத்தபட்டுவிட்டதால் பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி/கிராமம் சர்வே எண் 155/1 மற்றும் இளையரசனேந்தல் ஊராட்சி/கிராமம் சர்வே எண்303/2பி2 மற்றும் 303/3ஏ--ல் அமையும் மனை எண் 1, 4,7ஏ, 16, 17, 18, 22, 26 முதல் 30 வரை, 36 முதல் 38 வரை, 40 முதல் 44 வரை 46 முதல் 49 வரை 53 முதல் 59 வரை 62 64 முதல் 75 வரையுள்ள 44 மனைகளை இதன்மூலம் வரன்முறைப்படு:த்தி உத்தரவிடப்படுகிறது.

மேற்படி மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பார்வை 3-ல் கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனைப்பிரிவிற்க்கு பொருந்தும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்
(கிராம ஊராட்சி)
குருவிகுளம்
30.1.18

**இணைப்பு.**
சர்வே எண் 155/1 ,303/2பி2 மற்றும் 303/3ஏ வரைபடம்

**பெறுநர்:**
திரு.எஸ்.காந்திராஜ் த/பெ.எஸ்.ஆர்.சுந்தர்ராஜன்
59M13, இராமையா நகர் 3வது தெரு,
கோவில்பட்டி

**நகல்:**
1.தனி அலுவலர் பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி
2.தனி அலுவலர் இளையரசனேந்தல் ஊராட்சி
3.சார்பதிவாளர் கோவில்பட்டி சார்பதிவகம்
4.ஆ3 இருப்புக் கோப்பு